**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 459/2023

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் நாள் திங்கள் கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 30.06.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | முகமது ஹமிம் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 10.12.1968 ம் தேதியிட்ட என் தந்தை பெயரில் உள்ள கிரய சாசனம் சான்று நகல் வா.சா.ஆ. 1 ஆகவும்
2) 24.03.1969 ம் தேதியிட்ட என் தந்தை பெயரில் உள்ள கிரய சாசனம் சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும்
3) 13.02.2019 முதல் பிரதிவாதிக்கு தாவாசொத்தை பொறுத்து 2, 3 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்தபாக விடுதலை பத்திரம் பதிவிறக்க நகல் வா.சா.ஆ.3 ஆகவும்
4) 15.02.2020 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ. 4 ஆகவும்
5) 06.08.2020 ம் தேதியிட்ட வழக்கு சொத்தின் தரப்பினர்களின் பங்கு குறித்த சான்று வா.சா.ஆ. 5 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது. தாவாபடி தீர்வாக வேண்டுகிறேன்.